
SENGUNTHAR INSTITUTIONS




SENGUNTHAR INSTITUTIONS










## திருச்செங்கோடு செங்குந்தர் கல்வி நிறுவனங்களில் ஆண்டுவிழா (29.05.2026)

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு செங்குந்தர் பொறியியல் கல்லூரி (தன்னாட்சி ),மற்றும் செங்குந்தர் மருந்தியல் கல்லூரி ,செங்குந்தர் செவிலியர் கல்லூரி செங்குந்தர் அலைடுஹெல்த்சயின்ஸ் கல்லூரிகளின் ஆண்டு விழா 29.05.2026 இன்று காலை 10.30 மணியளவில் செங்குந்தர் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது . இவ்விழாவில் செங்குந்தர் கல்லூரிகளின் செயலாளர் மற்றும் தாளாளர் பேராசிரியர் எ .பாலதண்டபாணி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். செங்குந்தர் கல்வி நிறுவனங்களின் தலைவர் ஜன்ஜான்ஸ் T.S.நடராஜன் அவர்கள் விருந்தினரை வரவேற்றார் . செயல் இயக்குனர் அரவிந்த் திருநாவுக்கரசு அவர்கள் முன்னிலை வகித்தார் .செங்குந்தர் பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் R .சதீஷ்குமார் அவர்கள் ,செங்குந்தர் மருந்தியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் M .சுரேந்திர குமார், செங்குந்தர் செவிலியர் கல்லூரியின் முதல்வர் முனைவர் P நீலாவதி, மற்றும் செங்குந்தர் அலைடுஹெல்த்சயின்ஸ் கல்லூரியின் முதல்வர் E. சௌமியா ஆகியோர் 2025-ம் ஆண்டிற்கான கல்லூரிகளின் ஆண்டறிக்கைகளை வாசித்தனர் .ஆங்கிலத்துறை துறை தலைவி திருமதி S .புவனா அவர்கள் சிறப்புவிருந்தினரை அறிமுகப்படுத்தினார் .இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக சொர்க்கோ டாக்டர் பாரதி கிருஷ்ணகுமார் புகழ்பெற்ற தமிழ் திரைப்பட இயக்குனர் அவர்கள் கலந்து கொண்டார். அவர் தமது உரையில் தன்னை அறிந்தவன் தன்னை காப்பாற்றிக்கொள்வான் அதனால் மாணவர்கள் தங்களுடைய திறமைகளை அறிந்து செயல்பட வேண்டும் என்றும் , மாணவர்கள் குறைந்தபட்சம் தமிழ் ,மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளை கட்டாயம் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கூறி படிப்பின் முக்கியத்துவத்தை கூறினார் மேலும் கல்வியில் சிறப்பிடம் பெற்ற மாணவ, மாணவியருக்கு ,பல்வேறு கவிதை கட்டுரை போட்டிகள் ,சிறந்த நூலக பயன்பாட்டிற்கான விருது மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு சிறப்புப்பரிசுகள் வழங்கப்பட்டது .இதுமட்டும்அல்லாது100% தேர்ச்சி முடிவுகள் கொடுத்த ஆசிரிய பெருமக்களுக்கு ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட பரிசு தொகை வழங்கி கௌரவிக்கப்பட்டது. இறுதியாக ஆங்கிலத்துறை பேராசிரியர் P .சத்யா அவர்கள் நன்றியுரை கூறினார்

**SENGUNTHAR**

# Daily News

29-05-2026/SEC/DN/412

## நுவலிதமிழ் மன்றம் - தினம் ஒரு திருக்குறள்



குறள் 772:
கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.

விளக்கம்:
காட்டு முயலுக்கு எய்தும் அம்பை விட பிழைத்துவிடும் யானைமேல் எய்தல் இனிது.

## இலக்கணக் குறிப்பறிதல்

இன்னிசை அளபெடை என்பது செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக குறில் எழுத்துக்கள் நெடில் எழுத்துகளாகி அளபெடுத்தல் ஆகும். இது செய்யுளில் வரும் அளபெடைகளில் ஒன்று, மேலும் இது ஓசையைத் தூண்ட உதவுகிறது.

இலக்கண குறிப்பு:

அளபெடை:
எழுத்தின் ஒலிக்கு மாத்திரை கூட்டுதல்.

இன்னிசை அளபெடை:
செய்யுளை இனிமையாக இசைப்பதற்காக, ஓசைக்காக குறில் எழுத்துக்கள் நெடில் எழுத்துகளாகி அளபெடுத்தல்.

எடுத்துக்காட்டு:
"கெடுப்பதூஉம்" என்ற சொல்லைக் கவனியுங்கள், "தூ" குறில் எழுத்து "தூஉ" என நெடில் எழுத்துக்களாகி அளபெடுத்துள்ளது.

## பிறமொழிக்கு இணையான தமிழ்ச் சொற்கள்

பிறமொழி: இனாம்    தமிழ்மொழி: நன்கொடை